DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI

SC. No. 32/2021

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமராஜ் | த/பெயர் | : | பரமசிவம் |
| ஊர் | : | கடமலைக்குண்டு | தாலுகா | : | ஆண்டிபட்டி |
| சாதி | : | -- | தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | இந்து | வயது | : | 48/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2022

---

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கடமலைக்குண்டுவில் வசித்து வருகிறேன் . விவசாயம் செய்து வருகிறேன் . எதிரிகளை தெரியும் . செல்லப்பாண்டியன் என் உடன்பிறந்த சகோதரர். செல்லப்பாண்டியன் இந்த வழக்கு பிரச்சனையில் இறந்துவிட்டார் . செல்லப்பாண்டியன் கொலை செய்யப்பட்டார் . செல்லப்பாண்டியன் தங்கமாள் புரத்தை சேர்ந்த எதிரி மகாராஜனின் மகள் சித்திராவை திருமணம் செய்திருந்தார் . திருமணம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது . செல்லப்பாண்டியனுக்கும், அவரது மனைவி சித்ராவுக்கும் அடிக்கடி குடும்பத்தில் பிரச்சானை ஏற்பட்டது . சித்ரா கோவித்துக்கொண்டு தகப்பனார் வீட்டிற்கு சென்றுவிடுவார் . சமாதானம் செய்து அழைத்து வருவது வழக்கம் . சம்பவத்திற்கு சுமார் 2 வருடத்திற்கு முன்பு சித்ராவின் தம்பி மகேந்திரன் என் தம்பி செல்லப்பாண்டியன் வீட்டிற்கு வந்து செல்லப்பாண்டியனை அடித்துவிட்டார் . என் தம்பி கடமலைக்குண்டு

காவல்நிலையத்தில் மகேந்திரன் மீது புகார் கொடுத்தார் . வழக்கு பதிவு செய்யப்பட்டது. சம்பவத்திற்கு முன்பு 6 மாதத்திற்கு ஒரு நாள் என் தம்பி செல்லப்பாண்டியனை காணவில்லை . உறவினர்களிடமும், செல்லப்பாண்டியன் மனைவியிடமும் விசாரித்தேன் . செல்லப்பாண்டியன் கேரளாவிற்கு வேலைக்கு சென்று இருப்பதாகவும் , வந்துவிடுவார் என்றும் கூறினார் . கடந்த 21.02.2020 ம் தேதி என் தம்பியின் வீட்டில் சித்ராவும் , எதிரி மகாராஜனும் இருந்தனர் . நான் இருவரிடமும் விசாரித்தேன் . வெளியில் போயிருப்பதாகவும் , வந்துவிடுவார் என்றும் சொன்னார்கள். காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வருமாறு அழைத்தேன் . புகார் கொடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள் . கடந்த 23.02.2020 ம் தேதி நான் காலை 10.00 மணிக்கு கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் என் தம்பியை காணவில்லை என்று புகார் கொடுத்தேன் . நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1.** வழக்கு பதிவு செய்தனர் . கடந்த 29.02.2020 ம் தேதி காலை 4.00 மணிக்கு கடமலைக்குண்டு காவல் நிலையத்திலிருந்து என்னுடைய கைபேசியில் தொடர்பு கொண்டனர். போலீசார் என்னிடம் மகாராஜன் மயிலாடும்பாறை கிராம நிர்வாக அதிகாரியிடம் ஆஜராகி என் தம்பியை கொலை செய்துவிட்டதாக வாக்குமூலம் கொடுத்ததாக சொன்னார்கள். கூலிப்டையை வைத்து மகாராஜனும் , மகாராஜன் மகனும் செல்லப்பாண்டியனை கொலை செய்துவிட்டதாக கிராம நிர்வாக அதிகாரியிடம் சொன்னதாக சொன்னார்கள் . செந்தில் (எ) வெள்ளை செந்தில் , அன்பு கணேஷ் என்பவர்கள் தேனி ராஜா லாட்ஜில் தங்கியிருப்பதாகவும் , அவர்களை கைது செய்ய போவதாக சொன்னார்கள் . போலீசார், என்னிடம், என்னுடைய உறவினர்களை அழைத்துக்கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உச்சிபுழி

என்ற இடத்திற்கு வரச்சொன்னார்கள் . எனது தம்பியை அங்கு கொலை செய்து புதைத்து விட்டதாகவும் காவலர்கள் சொன்னார்கள் . பிரேதத்தை அடையாளம் காட்ட எங்களை வரச்சொன்னார்கள் . நானும், என் சகோதரி கெங்காதேவியும் , என் மைத்துனர் ராஜேந்திரனும் , தங்கை ஈஸ்வரியும் , ஈஸ்வரியின் கணவர் பாலுவும் , என் தங்கை செல்வியும் , செல்வியின் கணவரும் , உச்சிப்புழிக்கு சென்றோம் . உச்சிப்புழியில் கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் இருந்தார் . அவர் எங்களை உச்சிக்புழியில் உள்ள பள்ளிவாசலுக்கு பக்கத்தில் இருக்கும் பனங்காடுகளுக்கு அழைத்துச்சென்றார். காவல் ஆய்வாளர் கிஷோர் , செந்தில் (எ) வெள்ளைசெந்தில், அனபு கணேஷ் , தினேஷ் ஆகியோரை எனக்கு அடையாளம் காட்டினார் . பனங்காட்டில் தாசில்தார் , வருவாய் ஆய்வாளர் , கிராம நிர்வாக அதிகாரி, மருத்துவர் இருந்தனர். எதிரி கிஷோர் புதைத்த இடத்தை காவல் ஆய்வாளருக்கு அடையாளம் காட்டினார். கிஷோர் அடையாளம் காட்டிய இடத்தை இயந்திரத்தை வைத்து தோண்டினார்கள். அடையாளம் காட்டிய இடத்தில் பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது. அடையாளம் காணும் வகையில் பிரேதம் இல்லை . மருத்துவர் பரிசோதனை செய்தார் . பரிசோதனை முடிந்ததற்கு பிறகு சமய வழக்கப்படி இறுதி சடங்கு செய்ய இரண்டு எழும்பை எங்களிடம் கொடுத்தனர் . நாங்கள் எழும்பை எரித்து கடலில் கரைத்துவிட்டு வீட்டிற்கு வந்தோம் . என் தம்பி கொலை செய்யப்பட்ட விபரம் சித்ராவிற்கு தெரியும் என்றும் , சித்ரா எங்களிடம் மறைத்து விட்டதாகவும் எங்களிடம் சொன்னார்கள் . ஆண்டிபட்டி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தார். நான் வாக்குமூலம் கொடுத்தேன் . என் மனைவி ஜோதி , என் அக்கா கெங்காதேவி, தங்கை ஈஸ்வரி ஆகியோரும் ஆண்டிபட்டி நீதித்துறை நடுவரிடம்

வாக்குமூலம் கொடுத்தனர் . நான் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலம்

**அ.சா.ஆ.2.** ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் .

**குறுக்கு விசாரணை**

(மனுவின் மீது குறுக்கு விசாணை நிறுத்திவைக்கப்பட்டது ).

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது. அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI

SC. No. 32/2021

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராஜேந்திரன் | த/பெயர் | : வெள்ளைத்தேவர் |
| ஊர் : | கடமலைக்குண்டு | தாலுகா | : ஆண்டிபட்டி |
| சாதி : | -- | தொழில் | :விவசாயம் |
| மதம் : | இந்து | வயது | :62/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2022

---

(சாட்சி அழைக்கப்பட்டு , பிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கடமலைக்குண்டுவில் வசித்து வருகிறேன் . விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ராமராஜ் எனது மைத்துனர் . கெங்காதேவி என் மனைவி . கொலை செய்யப்பட்ட செல்லப்பாண்டியன் என் மைத்துனர் . எதிரிகளை தெரியும் . என் மைத்துனர் செல்லப்பாண்டியன் சுமார் 20 வருடத்திற்கு முன்பு சித்ராவை திருமணம் செய்து வாழ்ந்து வந்தார் . செல்லப்பாண்டியனுக்கும், சித்ராவிற்கும் அடிக்கடி குடும்பத்தில் பிரச்சனை ஏற்படுவது வழக்கம் . என் மைத்துனர் செல்லப்பாண்டியன் மனைவியை சமாதானம் செய்து அழைத்து வந்து குடும்பம் நடத்தி வந்தார் . சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்பு செல்லப்பாண்டிக்கும் , சித்ராவிற்கும் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன் . செல்லப்பாண்டியை சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்பு காணவில்லை . நானும், அ.சா.1 ராமராஜும் என் குடும்பத்தை சேர்ந்தவர்களும் சித்ராவை சந்தித்து

செல்லப்பாண்டியனைப்பற்றி விசாரித்தோம். என் மைத்துனர் செல்லப்பாண்டி பொங்கல், ஆடி பண்டிகைக்கு வரவில்லை என்று விசாரித்தோம். மீண்டும் 21.02.2020ம் தேதி சித்ரா வீட்டிற்கு சென்றோம். வீட்டில் சித்ராவும், எதிரி மகாராஜனும் இருந்தார்கள். சித்ரா எங்களிடம் செல்லப்பாண்டியன் கேரளாவிற்கு வேலைக்கு சென்றிருப்பதாகவும், வந்துவிடுவார் என்றும் சொன்னார். கடந்த 23.02.2020ம் தேதி கடமலைக்குண்டு காவல் நிலையத்திற்கு சென்று செல்லப்பாண்டியை காணவில்லை என்று புகார் கொடுத்தோம். அ.சா.1 புகார் கொடுத்தார். கடந்த 29.02.2020ம் தேதி காலை 4.10 மணிக்கு அ.சா.1 ராமராஜ் கைபேசியில் தொடர்பு கொண்டார். அ.சா.1 என்னிடம் எதிரி மகாராஜன் மயிலாடும்பாறை கிராம நிர்வாக அதிகாரியிடம் என் மைத்துனர் செல்லப்பாண்டியை கொலை செய்து புதைத்து விட்டதாக வாக்குமூலம் கொடுத்திருப்பதாக சொன்னார். அ.சா.1 னிடம் காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டியின் உறவினர்களை அழைத்துக்கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உச்சிப்புழி என்ற ஊருக்கு அழைத்து கொண்டு வரச்சொன்னதாக சொன்னார். நானும், என் குடும்பத்தினரும், உறவினர்களும் 29.02.2020ம்தேதி உச்சிப்புழி கிராமத்திற்கு சென்றோம். கடமலைக்குண்டு ஆய்வாளர் அங்கு இருந்தார். அந்த ஊரில் காவல் ஆய்வாளர் எங்களை உச்சிப்புழி பள்ளிவாசல் பக்கத்தில் உள்ள பனங்காட்டுக்கு அழைத்துச்சென்றார். பனங்காட்டில் எதிரிகள் தினேஷ், செந்தில் (எ) வெள்ளைச்செந்தில், அன்பு கணேஷ், கிஷோர் ஆகியோர் இருந்தனர். மருத்துவர், தாசில்தார், கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் அதிகாரி இருந்தனர். எதிரி கிஷோர் தாசில்தாரிடம் செல்லப்பாண்டியை புதைத்த இடத்தை அடையாளம் காட்டினார்.

தாசில்தார் இயந்திரத்தை கொண்டுவந்து அடையாளம் காட்டிய இடத்தை தோண்டினார். அழுகிய நிலையில் பிரேதம் ஒன்று வெளியே எடுக்கப்பட்டது . மருத்துவர் அவருக்கு ஆய்வுக்கு தேவையான உடல் உறுப்புகளை எடுத்துக்கொண்டார். எங்களுக்கு இரண்டு எழும்புகளை எடுத்து இறுதிச்சடங்கு செய்ய கொடுத்தார். நாங்கள் எழும்பை எரித்து சாம்பலாக்கி கடலில் கரைத்துவிட்டு வந்தோம். காவல் ஆய்வாளர் அ .சா.1 னிடம் மகாராஜன் செல்லப்பாண்டியனை கொலை செய்து புதைத்த தகவலை சித்ராவிற்கு சொல்லிவிட்டதாகவும் , சித்ரா எங்களிடம் கொலை செய்யப்பட்ட தகவலை மறைத்து விட்டதாகவும் சொல்லியிருக்கிறார். அ.சா.1 சொல்லி நான் அந்த தகவலை தெரிந்துகொண்டேன் . வழக்கு பற்றி கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் .

<u>**குறுக்கு விசாரணை**</u>

( மனுவின் மீது குறுக்கு விசாரணை நிறுத்திவைக்க்பபட்டுள்ளது )

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது. அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |